# மத்திய கிழக்கு அரபு நாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காக குடும்பப் பெண்கள் செல்வதற்கான காரணங்களும் அதனால் அவர்களின் குடும்ப வாழ்வில் ஏற்படும் தாக்கங்களும்: இஸ்லாமிய சமய மற்றும் சமூகப் பார்வை

**Factors of the migration of married women towards the Middle East Arabian Countries in order to seek employment and it's impact on their family life -An Islamic religious & social view**

I.M. Thalib[1]

## ஆய்வுச்சுருக்கம்

ஒரு குடும்ப வாழ்வுக்கு தொழில் இன்றியமையாதது. ஒரு குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் உழைத்து குடும்ப வாழ்க்கையை சரியாக கொண்டு செல்ல முடியாது என்று கருதுமளவிற்கு வாழ்க்கைச் செலவீனம் மிகைத்துக் காணப்படும் இக்கால சூழலில், குடும்பத் தலைவிகளான பெண்கள் தொழிலுக்காக தமது வீட்டை, தாய் நாட்டை, வீட்டை மற்றும் குடும்பத்தை விட்டு, மத்திய கிழக்கு அரபு நாடுகளுக்கு செல்வதில் உள்ள சிக்கல் நிலமைகளை, இவ்வாய்வு பிரச்சினையாக கொள்கிறது. குடும்பத் தலைவர்களான ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் நிமித்தம் செல்வதால் பிரச்சினைகள் இருந்தபோதும், ஒப்பீட்டளவில் ஒரு குடும்பத் தலைவியான தாயின் வெளிக்கிளம்புதலினால், குடும்பத்தில் ஏற்படும் தாக்கங்கள் மிகவும் மோசமானதாகவும், எதிர்கால சந்ததிகளான பிள்ளைகளின் நடத்தையிலும், கல்வியிலும் பலத்த சீரழிவுகளை ஏற்படுத்தி விடுகிறது என்பதை மறுக்க முடியாது, இவ்வாறான சூழலில், இஸ்லாமிய வழிகாட்டல்களை எடுத்துக் காட்டுவதுடன், சமுதாய நடைமுறையில் இதனால் ஏற்படும் அவலங்களை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மத்திய கிழக்கு அரபு நாடுகளை இங்கு நோக்குவதற்கான காரணம், தமிழ்மொழி பேசும் பெண்கள் வேலைவாய்ப்புக்காக, அதிகமாக மத்திய கிழக்கு அரேபிய நாடுகளை நோக்கியே படையெடுப்பதானால், மொழித் தொடர்பாடலில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர், ஆயினும் மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் பரவலாக பேசப்படுவதனால், தொடர்பாடல் இலகுவானதாக காணப்பட்டாலும், ஏற்படும் தாக்கங்களும், பாதிப்புக்களும் பொதுவானதே. இதற்கான பகுப்பாய்வு இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அல் ஹதீஸ் ஆகியவற்றின் கருத்துக்களின் அடிப்படையில் பெறப்பட்டு, சமுதாய நடைமுறைகளோடு ஒப்பிட்டு விவாதிக்கப்படுகிறது.

[1]I.M. Thalib (Senior Lecturer), Department of Arabic,
Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka. Email: *thalibm@esn.ac.lk*

இவ்வாய்வு பகுப்பாய்தல் மற்றும் விவரண ஆய்வியல் முறைமைகளை கொண்டதாக விளங்குகிறது. இதற்கான நடைமுறை தகவல்களை பெறும் பொருட்டு, சம்மந்தப்பட்ட பலரிடம் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் முதலாம் நிலைத் தகவல்களின் செல்வாக்கு மிகையானதாகும்.

**பிரதான பதங்கள்:**

குடும்ப பெண்/ வெளிநாட்டு வேலைவாய்ப்பு/ குழந்தை வளர்ப்பு/ தாக்கங்கள்/ அரபுமொழி

## 1. அறிமுகம்

மனித வாழ்வியல் துறைகளுக்கு பூரண வழிகாட்டும் மார்க்கமாக விளங்கும் இஸ்லாம், குடும்ப வாழ்வின் அச்சாணியான வருமான ஈட்டலுக்கு பல்வேறு ஆகுமான வழிமுறைகளை கற்றுத் தருவதுடன், அதனை பல்வேறு மட்டங்களில் ஊக்குவிக்கிறது. இறைத்தூதர் நபிகள் நாயகத்தின் பாசமிக்க முதல் மனைவி அன்னை கதீஜா சீமாட்டி அவர்களும், வர்த்தகத் துறையில் மிகவும் ஈடுபாடு உள்ளவராக காணப்பட்டார்கள். அதனடிப்படையில் இஸ்லாம், பெண்களுக்கு கல்வி கற்பதற்கான உரிமையை வலியுறுத்துவது போன்றே, வர்த்தகத்தில் ஈடுபடுதலை, சொத்துக்களுக்கு உரிமை கொள்வதை ஒருபோதும் தடுக்கவில்லை. ஆயினும் இதனை காரணமாக வைத்து, உழைத்து குடும்பத்தை நன்றாக பராமரிக்கும் கணவர், பெற்றோர் மற்றும் சகோதரர்கள் இருந்தும், தனது தலையாய கடமையான, குடும்பப் பராமரிப்பு மற்றும் குழந்தை வளர்ப்பு போன்ற விடயங்களை புறந்தள்ளி, தனது குடும்பத்தை, தேசத்தை விட்டு செல்வதற்கு, ஒரு பெண்ணுக்கு இஸ்லாத்தில் அறவே அனுமதியில்லை. ‘‘தாய் மடியே குழந்தையின் முதல் பாடசாலைப்படி" என்ற ஒரு அரேபிய கூற்றுக்கு ஏற்ப, ஒரு பிள்ளையின் வளர்ப்பில் தாயின் பங்களிப்பு இன்றிமையாதது, மட்டுமல்லாது அவள் அக்குடும்பத்தை விட்டு, உழைப்பின் நிமித்தமோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ வெளியேறினால், அவளும் சீரழிந்து அவளைச் சார்ந்த குடும்பமும் பல்வேறுபட்ட இன்னல்களுக்கும், அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்கும் என்பதை மறுக்க முடியாது. அந்த வகையில், இது குறித்த இஸ்லாத்தின் பார்வையை இக்கட்டுரை விவாதிக்கிறது.

மூதூர் ரிஸானா நபீக் என்ற யுவதிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையைத் தொடர்ந்து, பெண்களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புக் குறித்த பல சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்தச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, பெண்களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொடர்பாக சில தகவல்களை வழங்குவது, விழிப்புணர்வூட்டுவதாக அமையும் என்பதால் இவ்வாய்வின் அவசியம் உணரப்படுகிறது.

## 2. கருத்துப் பரிமாற்றங்களும் முடிவுகளும்

இன்றைய குடும்ப பெண்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வதற்கான பிரதான காரணிகளை கீழ்வருமாறு வரையறுக்க முடியும்.

### 2.1. வறுமை:

வறுமைக் கொடுமை ஒரு மனிதனின் வாழ்வில் ஏற்படும் மிக மோசமான இழிநிலையாகும். இறைத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் வறுமையை விட்டும் இறைவனிடம் பாதுகாவல் தேடியுள்ளார்கள், மட்டுமல்லாது வறுமை மனிதனை பாவச்செயல்களில் ஈடுபட தூண்டுதலை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளார்கள். (அல்ஹதீஸ்) இதன் பிரகாரம், வறுமை காரணமாக மாற்று வழியில்லாமல் வெளிநாடு செல்லும் பெண்கள் சமுதாயத்தில் அதிகமாக உள்ளனர். 'தனது வாழ்வு பாழாகிப் போனாலும் பரவாயில்லை, தனக்குக் கீழுள்ள சகோதர சகோதரிகளின் வாழ்விலேனும் ஒளி வீசட்டும்' என்ற விரக்தியான எண்ணத்துடன் வெளிநாடு செல்கின்றனர். *(எப். பழீலா, 2018)* இத்தகைய பெண்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் முயற்சித்தால், சொந்த நாட்டிலேயே உழைத்து வாழ வழிபிறக்கும். அந்த வழியைக் கண்டு பிடித்து முன்னேற முயற்சிக்க வேண்டும். இதற்கு அரச மற்றும் சிவில் அமைப்புக்களின் பங்களிப்புக்கள் இன்றிமையாதது.

### 2.2. வரதரட்சணைக் கொடுமை:

இஸ்லாத்திற்கு எள்ளளவும் உடன்பாடு இல்லாத வரதரட்சணைக் கொடுமையானது, எம் சமூகத்தில் தலைவிரித்தாடுகின்றது. '(ஆண்களே! நீங்கள் திருமணத்தின் போது) மணப்பெண்ணுக்குரிய வெகுமானத் தொகையை வழங்கி விடுங்கள்' (அல்குர்ஆன் 4: 4 ) என்று இறைவேதம் அல்குர்ஆன் கட்டளை இடுகிறது, இதேபோன்று, 'ஒரு மணப்பெண்ணுக்கு (திருமணத்தின் போது) மலையளவு அன்பளிப்புக்களை வழங்கி இருந்தாலும், அவற்றை மீளப்பெறக் கூடாது, அவ்வாறு மீளப்பெறுவதானது அற்பமான காரியமும், பகிரங்க பாவச்செயலுமாகும்' (அல்குர்ஆன் 4: 20 ) என்றும் அல்குர்ஆன் எச்சரிக்கிறது.

ஆயினும் இன்றைய சமுதாயத்தில் ஆண்கள், பெண்களாக மாறி வரதரட்சணை பெறுகின்றனர். சீதனமில்லாமல் பெண்கள் கரைசேர முடியாத நிலை நீடிக்கிறது. பெற்ற பிள்ளைக்கு சீதனம் சேர்ப்பதற்காகத் இளம் தாய்மார்களும், தமது வாழ்வுக்கு தாமே சீதனம் சேர்ப்பதற்காக இளங்குமரிகளும் கடல் கடந்து செல்கின்றனர். அங்கு அவர்கள் படும் அவஸ்தைகள், அவமானங்கள் மற்றும் அசௌகரியங்கள் அனைத்திலும் வரதரட்சணை வாங்கும் ஆண்களுக்கும் பங்குள்ளது. சீதனம் தேடப்போய் பலர் கற்பையும், வாழ்வையும் இழந்து வருகின்றனர். *(ஏ. எச். சபிய்யா, 2018)*

இந்த விடயத்தில் சமயத் தலைமைகளும், நிறுவனங்களும் தம்மாலான விழிப்பூட்டல்களையும் வழிகாட்டல்களையும் வழங்க முன்வந்தால் இதன் அகோரத்தை ஓரளவேனும் தணிக்கலாம்.

### 2.3. ஆடம்பர மோகம்:

பெரும்பாலான பெண்கள் தம்மிடம் இருக்கும் வசதிகளை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆடம்பர நோக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேர்ந்தெடுக்கின்றனர். ‘(மனிதர்களாகிய) உங்களை போட்டிபோட்டுக் கொண்டு, பொருளாதாரத்தை மேலதிகமாக தேடியலைவது, மண்ணறையை அடையும் வரை பராக்காக்கிவிட்டது’ (அல்குர்ஆன் 102: 1, 2) என்று ஆடம்பர மோகத்தில் அலைந்துதிரிவோரை அல்குர்ஆன் விழிப்புணர்வூட்டுகிறது.

உண்ணுவதற்கு போதியளவு உணவோ, அணிவதற்கு போதிய ஆடையோ இல்லை என்பதற்காக, வெளிநாடு செல்பவர்கள் மிகவும் குறைவானவர்களே. அடுத்த வீட்டாரை பார்த்துவிட்டு, அவர்களை விட பெரிய வீடும், பெரிய நகையும் வங்க வேண்டும் என கனவு காண்கின்றனர். *(எம். ஆயிஷா, பணிப்பெண், 2019).*

இளம் பெண்கள் கூட, இந்த ஆடம்பர மோகத்தில்தான் பெரும்பாலும் வெளிநாடு செல்கின்றனர். இந்தப் பிரச்சினையை ஆன்மீக வழிகாட்டல்கள் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

### 2.4. முகவர்களின் தூண்டுதல்:

கிளை முகவர்கள் (சப் ஏஜன்ட்) எனக் கூறப்படுவோர் வீடுவீடாகச் சென்று, கடவுச்சீட்டை தந்தால் இவ்வளவு கிடைக்கும் என்று பெண்களை வெளிநாடு செல்ல ஆர்வமூட்டுகின்றனர், இந்த நிலையில் அவர்கள், அப்பெண்களின் குடும்ப சூழ்நிலைகளை கவனத்தில் கொள்வதில்லை மாறாக, தமது வருமானத்தை மட்டுமே அவர்கள் பிரதானமாகக் கொள்கின்றனர். இவ்விடயத்தில் இவர்கள் தீமைகளுக்கு வழியேற்படுத்தும் சாத்தானிய முகவர்களாகவே தொழிற்படுவர்.

‘சாத்தான் உங்களுக்கு வறுமையை அச்சுறுத்தி, மானக்கேடான காரியங்களைக் கொண்டு ஏவுகிறான்’ (அல்குர்ஆன் 2: 268 ) என்று அல்குர்ஆன் சாடுகிறது.

அந்தோ பரிதாபம் ! ஏழைப் பெண்கள் கடவுச்சீட்டைக் முகவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, சில ஆயிரம் ரூபாய்களை வாங்கி செலவழித்துவிட்டு, மீளளிக்க வழியில்லாமல் வெளிநாடு செல்கின்றனர். வெளிநாடு செல்லும் எண்ணமே இல்லாத பெண்களின் உள்ளங்களிலும், இந்த முகவர்கள் ஊசலாட்டத்தை ஏற்படுத்தி விடுகின்றனர். *(எம். ஆயிஷா, 2019).*

பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்பி பணம் சம்பாதிக்கும் இந்த முகவர்கள், எந்த அயோக்கியத்தனத்தை வேண்டுமானாலும் செய்யத் தயாராக உள்ளனர். திருட்டுப் பாஸ்போட் தயாரித்தல், வயதை மாற்றுதல், சமயத்தை மாற்றி நடிக்கவைத்து அனுப்புதல் என இவர்கள் எல்லை மீறுகின்றனர். இந்த விடயங்களை சட்ட ரீதியாக

அணுவதன் மூலம் இவ்வாறான முகவர்களின் எல்லைமீறல்களை ஓரளவு தவிர்க்கலாம்.

**2.5. சமூகப் பொறுப்பு உணரப்படாமை:**

உண்மையில் எமது சமூக நிலைப்பாடுகளும், குடும்ப பெண்கள் வெளிநாடு செல்லக் காரணமாக உள்ளன. எமது சமூகத்தில் உள்ள செல்வந்தர்கள் உரிய முறையில் ஸகாத் (ஏழை வரி) மற்றும் ஸதகா (நன்கொடை) போன்ற பொருளாதார திட்டங்களைப் பேணி நடமுறைப்படுத்த முயல்வதுடன், இஸ்லாம் கூறும் குடும்ப உறவு முறைகள் மற்றும் அயலவர் உரிமைகள் சரியாகப் பேணி நடந்தால், நிறையப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

‘இஸ்லாமிய நோக்கில் ஸகாத் என்பது ஒரு கூட்டான, நிறுவன மயப்படுத்தப்பட்ட, கடமையான செயற்பாடாகும் இதை சமூகத் தலைவர்கள் சரியாக நடைமுறைப்படுத்தினால், உள்நாட்டில் சுயதொலிலுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். இவ்வாறே அநாதைகள் முறையாக அரவணைக்கப்பட்டால், அவர்களுக்காக கணவனை இழந்த கைம்பெண்கள், அந்நிய நாட்டில் அடிமைகளாய் வாழ வேண்டியதில்லை’. *(எச். எல். எம் முகைதீன், மௌலவி, 2019)*

**2.6. விதவைகளின் அதிகரிப்பு:**

உங்களில் வாழ்க்கைத்துணை இல்லாதவர்களுக்கு திருமணம் முடித்துக் கொடுங்கள், அவர்கள் ஏழையாக இருந்தால், இறைவன் தனது அருளால் அவர்களை செல்வந்தராக்கிவைப்பான். (அல்குர்ஆன் 24: 32 )

இஸ்லாத்தில் விதவைகளுக்கு மறுவாழ்வளிப்பது மிகவும் வரவேற்கத்தக்க நன்மையான காரியமாக இருக்கின்றபோதிலும், இன்றைய சமூகத்தில் கணவனை இழந்த, அல்லது விவாகரத்தான பெண்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான வழிமுறைகள் அருகி வருகின்றன, இதனால் பல இளம் விதவைகள், வாழ வழியில்லாமலும் வெளிநாடு செல்கின்றனர். ‘வெளிநாடு என்பது உழைப்புக்காக மட்டும் அல்ல, அவர்களது உடல் தேவையை மறைவில் தீர்த்துக் கொள்ளும் இலகு வழியாகவும் அமைந்து விடுகின்றது’. *(ஏ. எச். சபிய்யா, 2018).*

ஒரு விதவைப்பெண் தனியாக பஸ்ஸில் பயணிக்கையில், அடுத்தவர்களுடன் சிரித்துப் பேசினாலும், சமூகம் அவளை கேவலமாகப் பார்க்கின்றது. ஆனால் வெளிநாடு சென்றால் அவளை யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள்; நாட்டில் இத்தகைய பெண்களுக்கு மறுமணத்துக்கும் வழியில்லை என்பதால், வெளிநாட்டு வாழ்க்கை, அவர்களின் உடலியல் தாகங்களுக்கு தற்காலிக தீர்வாக அமைந்துவிடுகின்றது. விதவைகளுக்கான மறுவாழ்வளித்தலை மற்றும் பலதாரமணத்தை (Polygamy) சமூக நிறுவனங்கள் ஊக்கப்படுத்தினால் இப்பிரச்சினை ஓரளவு தணியும்.

### 2.7. ஆண்களின் பேடித்தனம்:

ஆண்களின் பேடித்தனமானது பெண்கள் வெளிநாடு செல்வதற்கு மிக முக்கிய காரணமாகும். குடும்பத்தில் ஏதேனும் கஷ்டமேற்படின், மனைவி நான் வெளிநாடு போகிறேன், உங்கள் கஷ்டம் குறையும் என்றதும், தனது மனைவியைக் கண்காணாத இடத்திற்கு அனுப்ப கணவன் சம்மதித்து விடுகின்றான். அங்கு அவள் எதிர்கொள்ளவுள்ள கஷ்டங்களை சிந்திப்பதேயில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) கூறுவார்கள்: "தனது குடும்பத்தில் நடக்கும் மானக்கேடான விடயங்களை அறிந்திருந்தும், அதைப் பற்றி எவ்வித உரோசமோ, கரிசனையோ காட்டாத ஒரு ஆண் சுவனம் நுழையமாட்டான்". (அல்ஹதீஸ்)

ஆண்மையுள்ள எந்த ஆணும் தனது குடும்பதில் மானக்கேடான விடயம் நடந்தேற, ஒருபோதும் சம்மதிக்கவேமாட்டான். எனவே பெண்கள் தமது கணவன்மாரின் சம்பாத்தியத்திற்கு ஏற்ப சிக்கனமாகவும், எளிமையாகவும் வாழப் பழகிக் கொள்வது இதற்கு சிறந்த தீர்வாக அமையும்.

ஒரு குடும்பத்தில் ஆண்மகன் மிகப்பொறுப்பு வாய்ந்தவனாக இருந்தால், அக்குடும்பத்தைக் காப்பாற்றி கரைசேர்க்க தேவையான ஆற்றலையும், சக்தியையும் இறைவன் அவனுக்கு வழங்க போதுமானவன்.

### 2.8. சமூகத்தலைவர்களின் அசிரத்தை:

பொதுவாக பெண்கள் வெளிநாடு செல்லுதல் அதிகரித்துப் காணப்படுவதற்கு இதுவும் மூல காரணங்களில் ஒன்றாகும். உலமாக்கள் எனப்படும் சமய அறிஞர்கள் இந்த விடயம் தொடர்பான விழிப்பூட்டலை பெரும்பாலும் கைவிட்டுவிட்டனர். இது சமூக அங்கீகாரம் பெற்ற விடயமாக மாறிவிட்டது. ஆரம்ப காலத்தில் பெண்கள் தொழிலுக்காக வெளிநாடு செல்வதை சமூக முற்போக்காளர்கள் எதிர்த்தனர். தற்காலத்தில் எவருமே இதன் பாதிப்புகள் தொடர்பாக பிரச்சாரம் செய்வது கிடையாது. இதுபற்றி விழிப்புணர்வூட்டப்பட்ட பகுதிகளில், பெண்களின் வெளிநாட்டுப் பயணம் அரிதாகவேயுள்ளது. *(எச். எல். எம் முகைதீன், மௌலவி, 2019).*

நபிகள் நாயகம் (ஸல்) கூறுவார்கள்: நீங்கள் அனைவரும் பராமரிப்பாளர்கள், (மறுமையில்) நீங்கள் உங்கள் பராமரிப்பில் இருந்தவர்கள் பற்றி விசாரிக்கப் படுவீர்கள். (அல்ஹதீஸ்)

எனவே சமூகத்தலைவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து செயற்பட்டால் அதிகமான விடயங்களுக்கு தீர்வுகள் இலகுவாக கிடைக்கும்.

மேற்குறித்த விடயங்களோடு மேலும் பல காரணிகள் இருப்பினும், அவை இவ்வாறான பிரதான தலைப்புகளில் உள்ளடக்க முடியுமானவைகளாகும் என்பது எனது அபிப்பிராயம்.

## *3. குடும்ப பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள்:*

### 3.1. பெண்களுக்கொதிரான துஷ்பிரயோகம்:

வெளிநாட்டு வேலைவாய்ப்பால் ஏற்படும் பெரிய பாதிப்பு இதுதான். பெண்களில் பலர் தமது கற்பை இழக்கின்றனர். வெளிநாட்டில் மட்டுமன்றி உள்நாட்டிலும் அவர்கள் சீரழிக்கப்படுகின்றனர். சில சமயங்களில் அவர்களை வேட்டையாடும் முதல் ஓநாய்கள், அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கும் முகவர்களாகவே இருப்பர். சிறு வயதுப் பெண்பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பும் முகவர்கள், அவர்களுக்கான அடையாள அட்டை, பாஸ்போட் எடுக்க கொழும்புக்கு அழைத்துச் செல்கின்றனர். விரைவில் முடிக்கக்கூடிய வேலையாக இருந்தாலும், எப்படியாவது தாமதித்து தங்கவைக்க முயற்சிப்பர். தங்கும் சந்தர்ப்பத்தில் அவர்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

சிலர் வெளிநாட்டுப் பயணத்திற்கான முன்னேற்பாட்டுக்காக, கொழும்பு வந்து தங்கும் பெண்களை, பிற ஆடவர்களுக்கு தொடர்பு படுத்திக் கொடுக்கும் கேவலமும் பரவலாக இடம்பெறுகின்றது. சில முகவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்ப விமான நிலையம் வந்து குறித்த பெண்ணை அனுப்பி விட்டு, அவளது உறவினர்களிடம் ‘‘நீங்கள் ஊருக்குப் போகலாம், உங்கள் மகள் பிலைட் ஏறிவிட்டாள்’’ என அனுப்பி விடுகின்றனர். விமான நிலையத்தின் உள்ளே சென்ற பெண், ஏதோ சில சிக்கல் காரணமாக போகமுடியாமல் வெளியே வந்தால், அவளது குடும்பத்தினர் ஊருக்குச் சென்றிருப்பார்கள். அவளுக்கு எஞ்சியிருக்கும் ஒரே துணை அந்த ஏஜன்ட் காரன் மட்டும் தான். *(எம். எச். எம் புஆத், 2019)*

(இப்படி கூறுகையில், இதில் விதிவிலக்கான முகவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இருந்தும் இப்படியெல்லாம் நடக்கின்றது என்ற உண்மையான தகவலை வெளிப்படுத்தவே இதனை குறிப்பிடவேண்டியுள்ளது).

விமானம் ஏறும் முன்னரே, இவ்வாறு திட்டமிட்டுக் கருவறுக்கப்படும் அப்பாவிப் பெண்கள் ஏராளம் உள்ளனர். அங்கு சென்ற பின்னர், ஒரு அந்நிய வீட்டில் இரண்டு வருடங்கள் தங்கவேண்டும். அந்த வீட்டில் உள்ள முதலாளி, அவரது மகன்கள் மற்றும் வீட்டுச் சாரதிகள் போன்ற பல ஆண்களின் காம வேட்டைக்கு, அவள் ஆளாகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. *(ஏ. எச். சபிய்யா, 2018)*

### 3.2. வேலி தாண்டும் வெள்ளாடுகள்:

வெளிநாடு செல்லும் பெண்கள், உள்நாட்டில் கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்தாலும், வெளிநாடு சென்றபின், கால சூழலாலும் சந்தர்ப்பவசத்தாலும், தவறிழைப்பவர்களாக மாறி விடுகின்றனர். சிலர் பணத்துக்காக தவறுக்கு விரும்பியே இணங்குகின்றனர். உழைக்க வந்துவிட்டோம், உழைத்துவிட்டுப் போவோம் என்ற மனோநிலையில் சில பெண்கள், விரும்பியே தவறுக்கு ஒத்துழைக்கின்றனர். மற்றும் சில யுவதிகள்

வெளியில் பணி செய்யும் ஆண்களுடன் நட்பை பேணிக்கொள்கின்றனர். சில வீடுகளில் தனியாக வெளியில் செல்ல அனுமதிப்பர். அவ்வேளைகளில் இந்நட்பு தவறான உறவுக்கு வழிகோலுகிறது. *(எம். எச். எம் புஆத், 2019)*

சில பணிப்பெண்கள் பணிமுடிந்து நாட்டுக்கு வருகையில், விமானத்திலே அல்லது பஸ் பயணத்திலே குறிப்பிட்ட மணித்தியாலங்களில், பிற ஆடவர்களுடன் நெருங்கிப்பழகி உல்லாசமாக பயணிக்கும் காட்சிகளை கண்கூடாக காண்கின்றோம். இவர்கள் தனிமையில் எப்படி இருந்திருப்பர் என்பதையும் ஊகிக்க முடியும். ஒரே வார்த்தையில் கூறுவதாயின், ''ஆடவர்கள் முற்றும் துறந்த முனிவர்களும் அல்லர். இந்த பணிப்பெண்கள் அனைவரும் படி தாண்டாத பத்தினிகளும் அல்லர்'' என்றுதான் கூற வேண்டும்.

### 3.3. சீரழியும் குடும்பம்:

குடும்பம் என்பது கணவன், மனைவி, பிள்ளைகள் எனும் உறவுகளைக் கொண்டது. ஒரு குடும்பப்பெண் வெளிநாடு செல்வதால், அக்குடும்பத்தின் தலைவி வீட்டில் இல்லாமல் போய்விடுகின்றாள். எனவே குடும்பமானது மாலுமியற்ற கப்பலின் நிலையாகி விடுகின்றது.

#### 3.3.1. கணவன்:

சோம்பேறியான ஆண்கள் பெரும்பாலும் சுயநலமிக்கவர்களாகவே இருப்பார்கள். மனைவியை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, பிள்ளைகளை கவனிக்க வேண்டுமென சாட்டுக்கூறி, வழமையான தொழிலையும் கைவிட்டு, மனைவி அனுப்பும் பணத்தையும் இவர்கள் வீண்விரயமாக செலவு செய்கின்றனர். வீடு கட்டும் நோக்கத்தில் வெளிநாடு செல்லும் பெண்கள், கடைசி வரை வெளிநாடு சென்று கொண்டே இருக்கின்றனர். *(றபீக்கா, 2018)*

மனைவி என்பவள் கணவனுக்கான மூக்கணாங்கயிறு. அவள் இல்லையென்றால் மூக்கணாங்கயிறு இல்லாத மாடு போன்று, கணவன் அங்குமிங்கும் அலைந்து திரியத் துவங்குகின்றான். நிறைய ஆண்கள் மதுவுக்கும், சூதுக்கும் அடிமையாகின்றனர். சிலர் மனைவியை வெளி நாட்டுக்கு அனுப்பி விட்டு, தவறான பாலியல் உறவை நாடுவர். சிலர் தன்னினச் சேர்க்கைக்கு உள்ளாகின்றனர். மற்றும் சிலர் சுயஇன்பம் காண்பதில் திளைத்துப் போகின்றனர்.

#### 3.3.2. மூத்த ஆண் மகன்:

தாய் இல்லாத வீட்டுடன் தனயனுக்கு அதிக பிடிப்பு இருக்காது. அதிகமாக அவன் வெளியில் காலத்தைக் கழிப்பான். இச்சந்தர்ப்பங்களில் களவு, சிகரட், அபின், குடு மற்றும் ஆபாச சினிமா போன்ற தீய பழக்கங்கள் அவனது வாழ்வில் குடிகொண்டு விடுகின்றன மட்டுமல்லாது தந்தையும், தனயனும் பரஸ்பரம் வெறுப்படைகின்றனர். அதிகமாக வீட்டை விட்டும் வெருண்டோடும் சந்தர்ப்பங்கள், பல இளவயதுத்

திருமணங்கள் கூட, இதனால்தான் ஏற்படுகின்றன. *(எம். சீ. அப்துல் மஜீத், மௌலவி, 2019).*

### 3.3.3. மகள்:

ஒரு தாய் வெளிநாடு சென்றால், அவளது மூத்த மகள் படிப்பை நிறுத்தி விடுகிறாள். எதிர்கால குடும்பத் தலைவி, கல்வி கற்றல் உரிமையை இழக்கின்றாள். தந்தையின் பொடுபோக்கு, சகோதரனின் தவறான பழக்க வழக்கங்கள் மற்றும் இள வயதில் குடும்பச் சுமை போன்றவற்றால் மனதால் பாதிப்புறுகிறாள். வீட்டில் தனிமையாகும் சமயம், அயல் வீட்டு மற்றும் உறவுமுறை ஆண்களின் சீண்டல்கள், தூண்டல்கள், சூடேற்றும் சினிமாப் படங்கள், பாடல்கள் மற்றும் நாடகங்கள் போன்ற காரணங்களால் அவள் காதல் வயப்படுகின்றாள். வீட்டை விட்டு ஓளித்தோடும் நிலைக்கும் தள்ளப்படுகிறாள். சில சமயங்களில் உறவுமுறை ஆண்களாயே தவறாக வழிநடாத்தப்படுகின்றாள் மட்டுமன்றி, தமது தந்தையால் கூட பாதிப்படைந்த பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

### 3.3.4. சிறிய பிள்ளைகள்:

ஒரு தாய் வெளிநாடு செல்லும் போது, அவளது சிறிய பிள்ளைகள், பாட்டி அல்லது சகோதரிகள் அல்லது மூத்த மகள் மூலம் பராமரிக்கப்படுகின்றார்கள். பாட்டி பாசத்தைக் காட்டினாலும், தேவையான வழிகாட்டலை வழங்கமாட்டாள். தாயின் சகோதரிகள் சில காலங்கள் நன்றாகப் கவனித்தாலும், காலப் போக்கில் பிள்ளையைப் பார்ப்பதை விட, காசோலை எப்போது, எவ்வளவு வரும் என்பதில் தான் அவர்களது கவனம் திரும்புவது இயல்பானது. இள வயது சகோதரியால் பிள்ளைகளை சரியாகப் பராமரிக்க முடியாது. தந்தையைப் பொறுத்த வரையில், அக்குழந்தைகளுடன் போதியளவு பொறுமையுடன் நடக்க அவரால் முடிவதில்லை. *(எப். பழீலா, 2018).*

பச்சிளம் பருவத்தில் தனது தாய் உயிரோடிருந்தும், அவளது அன்பையும் அரவணைப்பையும் பெற முடியாமல் தவிக்கும் அந்தப் பிஞ்சு மனம் துரதிஷ்டவசமானதே.

### 3.3.5. சகோதரிகள்:

சில பெண்கள் வெளிநாடு சென்ற பின்னர், அவர்களின் பிள்ளைகளையும், கணவனையும் அவர்களது சகோதரிகள் பராமரிக்கின்றனர். இத்தகைய சூழலில் மதினிகளை இச்சைக்கு இணங்கச் செய்து, சில குடும்பங்கள் சீரழிந்துள்ளன. சிலர் சொந்த மாமியாருடன் கூட தவறாக நடந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. *(எஸ் . எம் . அலியார், மௌலவி, 2019).*

இவ்வாறு பார்க்கையில், குடும்ப பெண்களின் வெளிநாட்டுப் பயணம், பலரது வாழ்வை இருளாக்கி மங்கி மடியச் செய்து விடுகின்றது.

### 4. இஸ்லாமிய சட்டத் தீர்ப்பு

இஸ்லாமிய மார்க்க சட்டங்களின் பிரகாரம், ஒரு பெண் (மஹ்ரமான) மணமுடிக்கத் தகாத பாதுகாவலரான ஆண் துணை இல்லாமல், வெளிநாடு செல்வது தடுக்கப்பட்ட விடயமாகும். வெளிநாடு செல்லும் பெண்கள் தடுக்கப்பட்ட (ஹராமான) பயணத்தில் இருப்பதுடன், தனது வருடக்கணக்கான வாழ்க்கையையும் பாவத்தைச் சுமந்த வண்ணமே கழிக்கின்றனர் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

''இரண்டு நாட்கள் பயணம் செய்யும் பெண்மணி கணவனோ, அல்லது மணமுடிக்கத் தகாத (மஹ்ரமான) ஆண் உறவினரோ இல்லாமல் பயணம் செய்யக் கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறுவார்கள்.'' *(அறிவிப்பவர்: அபூஸயீதுல் குத்ரி (றழி) ஆதாரம்: புஹாரி (1197)*

இரண்டு நாள் பயணம் செய்யக் கூடாது எனும் போது, இரண்டு வருடப் பயணம் ஹராமானது என்பது தெளிவாகும்.

''அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பக் கூடிய எந்தப் பெண்ணும், ஒரு பகல், ஒரு இரவு தொலைவுடைய பயணத்தை மணமுடிக்கத் தகாத (மஹ்ரமான) ஆண் உறவினர் இல்லாமல் மேற்கொள்வது கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறுவார்கள்.'' *(அறிவிப்பவர்: அபூ"ஹுரைரா(றழி) ஆதாரம்: புஹாரி: (1088)*

பொதுவாக ஒரு பெண் வெளிநாடு செல்வதாயின், அவளது கணவன் அல்லது சகோதரன், மகன், தந்தை போன்ற உறவினருடன் செல்வதாக இருந்தால், இஸ்லாமிய (ஷரீஆ) சட்ட ரீதியாக அதை குறைகூறவோ அல்லது தடுக்கவோ முடியாது.

## 5. முடிவுரை

முஸ்லிம் சமூகத்தில் இடம்பெறும் ஆன்மீக நெறிபிறழ்வுக்கும், குற்றச் செயல்களுக்கும் மற்றும் நெறிமுறை வீழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாக, பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணம் அமைந்துள்ளதால், குறிப்பாக குடும்பப் பெண்கள் வெளிநாட்டுக் கனவைக் கைவிட முயலவேண்டும். உள்நாட்டிலேயே தமக்கான ஆகாரத்தையும், பொருளாதாரத்தையும் தமது முயற்சியாலும், உழைப்பினாலும் அடைந்து கொள்ளமுடியும் என்பதை திடமாக மனங்கொள்ள வேண்டும்.

சமூகத் தலைமைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் பெண்களின் வெளிநாட்டுப் படையெடுப்பைத் தவிர்க்க ஆவண செய்ய வேண்டும். முறையான ஸகாத் (ஏழைவரி) விநியோகம், பைதுல்மால் அமைப்புக்கள் மற்றும் பெண்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு போன்ற திட்டங்களைத் ஊக்குவிக்கவேண்டும். குறிப்பாக வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க இளைஞர்கள் முன்வரவேண்டும், பெண்கள் வெளிநாட்டுத் தொழிலை தேடிச் செல்வதற்கு நேரடியான, மறைமுகமான மிகப் பெரும் காரணியாக

வரதட்சணை விளங்குவதால், அதனை கைநீட்டி வாங்கும் ஆண்கள் அனைவரும் தொலைவான மறைவிடங்களில் சம்பவிக்கும் மேற்குறித்த அத்தனை பாவங்களிலும் பங்குதாரர்கள் என்பதை மறந்துவிடலாகாது.

### *6. உசாத்துணைகள் :*


*1. அல்குர்ஆன்*

*2. அல் ஹதீஸ்*

*3. காழி நீதிமன்ற அறிக்கைகள் 2016 - 2018*

*4. அல் இஸ்லாஹ் மாதாந்த சஞ்சிகை - 05 - 06 / 2018*

*5. செய்தித்தாள்கள் - மீள்பார்வை மற்றும் தினகரன் - 2018 - 2019*


### *நேர்காணல்கள்*

*1. எம். எஸ்.எம் நஸீர், திடீர் மரண விசாரணை அதிகாரி, ஏறாவூர்.*

*2. எச். எல். எம் முகைதீன், மௌலவி, பட்டதாரி ஆசிரியர்.*

*3. எம். எச். எம் புஆத், உப முகவர் (Former Sub. Agent of Foreign Employment).*

*4. எம். சீ. அப்துல் மஜீத், மௌலவி, முன்னாள் காழி நீதிபதி, ஏறாவூர்.*

*5. எஸ். எம். அலியார், மௌலவி, முன்னாள் காழி நீதிபதி, காத்தானகுடி.*

*6. யூ. எல். எம். இல்யாஸ், மௌலவி, தலைவர் - மத்தியஸ்த சபை, ஓட்டமாவடி.*

*7. எப். பழீலா, பணிப்பெண், 2005 - 2012, குவைட், துபாய்.*

*8. எம். ஆயிஷா, பணிப்பெண், 2002 - 2006, துபாய், சஊதி அரேபியா.*

*9. ஏ. எச். சபிய்யா, பணிப்பெண், 2012 - 2016, சஊதி அரேபியா, கட்டார்.*

*10. எஸ். றபீக்கா, பணிப்பெண், 2000 - 2003, சஊதி அரேபியா.*